இனிமையான குழந்தைகளே! நீங்கள் இந்த ஆன்மீகப் பல்கலைக் கழகத்திற்கு (யுனிவர்சிட்டிக்கு) புத்தியில்லாமலிருந்து புத்திசாலியாவதற்கு வந்திருக்கிறீர்கள். புத்திசாலி என்றால் தூய்மையானவர். தூய்மை அடைவதற்கான படிப்பை நீங்கள் இப்பொழுது படிக்கிறீர்கள்.

கேள்வி: புத்திவான் குழந்தைகளின் முக்கிய அடையாளம் என்ன?

பதில்: புத்திவான் குழந்தைகள் சதா ஞானத்தினை நினைவு செய்து கொண்டிருப்பார்கள். அவர்களுக்கு எல்லையற்ற போதை ஏறி இருக்கும். அவர்களுடைய புத்தியில் முழு சிருஷ்டி சக்கரத்தின் ஞானம் இருக்கும். நமது பாபா நமக்காக பரந்தாமிலிருந்து வந்திருக்கிறார் என்ற போதை இருக்கிறது. நாம் அவரோடு பரந்தாமில் வசித்திருந்தோம். நமது பாபா ஞானக்கடல். நாம் இப்பொழுது மாஸ்டர் ஞானக்கடலாகி இருக்கிறோம், அவர் நமக்கு முக்தி - ஜீவன் முக்தியின் ஆஸ்தியைத் தர வந்திருக்கிறார்.

பாடல்: என் மன வாசலில் யார் வந்தது?.....

ஓம்சாந்தி. ஜீவ் (உடல்) ஆத்மா அறிந்திருக்கிறது, நம்முடைய பரம்பிதா பரமாத்மா நம் முன்னால் அமர்ந்து கற்பித்துக் கொண்டிருக்கிறார். அதாவது இராஜயோகத்தைக் கற்பித்துக் கொண்டிருக்கிறார். அதனால் இது தெய்வீகமான பல்கலைக் கழகம் (யுனிவர்சிட்டி) ஆகிறது. இதை யுனிவர்சிட்டி என்று ஏன் சொல்கிறோம்? எந்தெந்த யுனிவர்சிட்டிகள் எல்லாம் இருக்கின்றனவோ அவை யுனிவர்ஸ்க்காக (உலகத்திற்காக) அமைய வில்லை. வெளி நாட்டில் யுனிவர்சிட்டி இருக்கிறது. ஆனால் அங்கே வெள்ளையர் கருப்பர்களை உள்ளே வர அனுமதிப்பதில்லை. ஆகவே அவை யுனிவர்ஸ்க்காக அமையவில்லை. எனவே அதை யுனிவர் சிட்டி என்று சொல்ல முடியாது. இங்கே குழந்தைகள், இது உண்மையிலும் உண்மையான ஈஸ்வரிய யுனிவர்சிட்டி என்பதை அறிந்திருக்கின்றீர்கள். ஆனால் எவராலும் புரிந்து கொள்ள முடியாது. ஏனெனில் அறிவில்லாதவர்கள். அறிவில்லா தவர்களை அறிவாளியாக பாபா தான் மாற்றுகின்றார். மனிதன் புத்திவானுக்கு முன்னால் தலை வணங்குகிறான். தேவி தேவதை களுக்கும், சந்நியாசிகளுக்கும் தலை வணங்குகிறார்கள். சந்நியாசி தூய்மையாக இருப்பதால் நிச்சயமாக புத்திவானாக இருக்கிறார்கள். பவித்திரத்தை உயர்வாக ஒப்பு கொள்கிறார்கள். இந்த விகாரம் தான் மனிதனை தொல்லைபடுத்துகிறது. ஆகையால் தூய்மையாக வாழும் சந்நியாசி களை இல்லறவாசிகள் புத்திவான் என்று நினைக்கிறார்கள். அவர்களுடைய பாதங்களை வணங்குகிறார்கள். சந்நியாசி உடையைப் பார்த்தால் போதும் உடனே தலை வணங்குகிறார்கள். இப்பொழுது அவர்களுடைய புகழ் குறைந்து விட்டது. ஆகவே எச்சரிக்கையுடன் அடியெடுத்து வைக்கிறார்கள். முன்பு சந்நியாசிகளைப் பார்த்ததும் உடனே சுவாமிஜி எங்கள் வீட்டிற்கு வாருங்கள் என்று வேண்டினார்கள். இப்பொழுது அவர்கள் ஏராளமாகி விட்டார்கள். மேலும் தமோபிர தானமாகி (அழுக்காகி) விட்டார்கள். ஆகையால் மிக மிகப் புகழ் வாய்ந்தவர்களுக்கு மட்டும் மரியாதை இருக்கிறது. பெரிய மனிதர்கள் கூட அவர்களுக்குத் தலை வணங்கு கிறார்கள். ஏன்? அவர்கள் சந்நியாசிகளை விட அதிகம் படித்தவர்கள். ஆனால் சந்நியாசிகள் பவித்திரமாக இருக்கிறார்கள். சந்நியாசம் செய்திருப்பதால் புத்திவான் என்று ஏற்றுக் கொள்ளப் படுகிறார்கள்.

இப்பொழுது நீங்கள் புத்திவான் ஆகிறீர்கள். நீங்கள் இப்பொழுது படைத்தவர், படைப்பைப் பற்றிய முதல், இடை மற்றும் இறுதியை அறிகின்றீர்கள். ஆனால் உங்களில் கூட எல்லோருக்கும் அந்த அளவு போதை இல்லை. போதை ஏறுவதற்கும் அதிக நேரம் ஆகிறது. முழு போதை என்பது கடைசியில் தான் இருக்கும். இப்பொழுது எவ்வளவுக்கெவ்வளவு நீங்கள் முயற்சி செய்வீர்களோ, அவ்வளவு நஷா ஏறும். நிரந்தரமாக இந்த நினைவு இருக்க வேண்டும். நம்முடைய ஆத்மாவின் தந்தையான பரமாத்மா வந்திருக்கிறார். நமக்குப் படிப்பு கற்றுத் தந்து கொண்டிருக்கிறார், உலகத்தின் எஜமான் ஆக்குவதற்காக, எனவே முயற்சி செய்வதற்கு சுபமான கவலை இருக்க வேண்டும். அனைவருக்கும் அந்த கவலை இருப்பதில்லை. இங்கு கேட்கும் பொழுது போதை ஏறுகிறது. இங்கிருந்து வெளியே கிளம்பி விட்டால் விளையாட்டு முடிந்து போகிறது. வரிசைப்படி இருக்கிறார்கள், இல்லையா? நம் ஆத்மாவின் தந்தை வந்திருக்கிறார் நாம் அவரோடு பரம்தாமில் வசித்திருந்தோம் இப்படி யாரும் புரிந்து கொள்ளவில்லை. சாது, சந்நியாசி முதலியோர் தூய்மையாக இருக்கிறார்கள். அவர்களில் கூட வரிசை இருக்கிறது. நம் பரம்பிதா பரமாத்மா ஞானக்கடல் ஜீவன் முக்தி வள்ளல், அவர் நம்மை சொர்க்கத்தின் எஜமான் ஆக்குகின்றார் என்ற நம்பிக்கை எல்லோருக்கும் ஏற்படவில்லை. இங்கிருந்து காலை வெளியே வைத்ததும் அந்த குஷி மறைந்து விடுகிறது. அப்படி இருக்காவிட்டால் குழந்தைகளுக்கு எவ்வளவு குஷி இருக்கும்!

நானும் இந்த உடலை ஆதாரமாக எடுத்திருக்கிறேன். இல்லாவிட்டால் இராஜயோகத்தை எப்படி கற்றுத் தருவேன்? எனக்கு சொந்தமான சரீரம் இல்லை. கோவிலில் பாருங்கள், எல்லோருக்கும் (தேவதைகளுக்கு) சொந்த சரீரம் இருக்கிறது. நானோ அசரீரி. மற்ற அனைவருக்கும் சூட்சமமான, ஸ்தூலமான சரீரம் கிடைத்திருக்கிறது. எனக்கு சரீரம் இல்லை. சோமநாதர் கோவில் அல்லது சிவனுடைய கோவில் எங்கு சென்றாலும் அங்கு நிராகாரி (மனித தோற்றம் இல்லாத) வடிவம் இருக்கிறது. பெயர் மட்டும் விதவிதமாக வைத்து விட்டார்கள். ஆத்மா பரந்தாமிலிருந்து வருகிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். விதவிதமான சரீரத்தை தாரணை செய்து, பாகத்தை ஏற்று நடிக்கிறது. நான் இந்த 84 பிறவிச் சக்கரத்தில் வந்திருக்கிறேன் நிராகாரமானவர் (சரீரமற்றவர்) எப்படி வருகிறார் என்று நீங்கள் மற்றவருக்கு சொல்வீர்கள். ஆமாம், வர முடியும். உதாரணமாக பித்ருக்களுக்கு சாப்பாடு கொடுக்கிறீர்கள், அப்பொழுது ஆத்மா வருகிறது இல்லையா? அதற்கு சரீரம் இல்லை. ஆத்மா பிரவேசிக்கிறது அப்பொழுது அந்த ஆத்மா இந்த சரீரத்தில் பிரவேசித் திருக்கிறது என்பதை நீங்கள் புரிந்து கொள்கிறீர்கள். பூதத்தின் ஆத்மாக்கள் நிறைய சஞ்சலம் (தொல்லை) கொடுக்கிறது. கல்லை எடுத்து வீசுகிறது ஆத்மா சரீரத்தில் வரும்பொழுது, சில வேலையை செய்ய முடிகிறது. அதை பேய் என்று கூறுகின்றார்கள். அசுத்தமான ஆத்மாக்களும் நுழைகின்றன. அசுத்த ஆத்மாக்கள் எப்படி அலை கின்றன என்று குழந்தைகளுக்கு அனுபவம் இருக்கிறது, அதாவது அதற்கு சொந்த சரீரம் கிடைக்கும் வரை திரியும். சுத்தமான ஆத்மா கூட வருகிறது. இதுவும் டிராமாவில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. எது நடந்து கடந்து போனதோ அது டிராமாவின் விளையாட்டு பாபா கூறுகிறார், நான் வந்து சாதாரண வயோதிகருடைய உடலில் பிரவேசிக்கிறேன். கண்டிப்பாக அனுபவசாலி சரீரம் தேவை. பிரம்மாவின் பெயர் புகழ் அடைந்திருக்கிறது. பிரம்மாவின் அறிவுரையும் புகழ்

அடைந்திருக்கிறது. பிரம்மாவுக்கு யாரிடமிருந்து அறிவுரை கிடைத்தது? சிவபாபாவிடமிருந்து. பிரம்மா சிவபாபாவின் குழந்தையாக இருக்கிறார். ஆகவே அவருடைய தாக அந்த ஸ்ரீமத் இருக்கிறது. மேலும் நிச்சயமாக முக்கியமான ஸ்ரீமத் பிரம்மா வினுடைய தாகவும் இருக்க வேண்டும். ஏனென்றால் அவருக்குள் பாபா பிரவேசிக்கின்றார். பாரதவாசிகள் இந்த விஷயங்களை அறியவில்லை. ஏனென்றால் அவர்கள் நினைக்கின்றார்கள் எல்லாம் ஒன்று தான். கிருஷ்ணரை மகாத்மா, யோகேஷ்வர் என்று கூறுகின்றார்கள். ஆனால் ஏன் அப்படி கூறுகின்றார்கள்? இதை அறியவே இல்லை. கிருஷ்ணருடைய ஆத்மா இப்பொழுது ஈஸ்வரர் மூலம் யோகம் கற்று, யோகேஷ்வரர் ஆகிக் கொண்டிருக்கிறது. இது எவ்வளவு ஆழமான இரகசியம் என்று. மனிதர் சொல்கிறார்கள் - பரமாத்மா பெயர் வடிவத்திலிருந்து விலகி இருக்கிறார் அவருக்கு சரீரமே இல்லை. ஆனால் நீங்கள் சோம்நாத் கோவில் சிவனுடைய அவதாரத்தின் நினைவுச் சின்னம் என்று கூறுகிறீர்கள். நிச்சயமாக கல்பத்திற்கு முன்பு சிவபாபா வந்திருந்தார், இப்பொழுதும் வந்திருக்கிறார். பிறகு துவாபர்யுகத்தில் அவருக்கு பக்தி ஆரம்பிக்கிறது, சிவராத்திரியைக் கொண்டாடுகிறார்கள்.

பாபா வந்து புரிய வைக்கிறார், ஆத்மாக்களான நீங்கள் நடிப்பதற்காகப் பரம்தாமிலிருந்து வந்திருக்கிறீர்கள். ஆத்மா அழியாது. இதில் 84 பிறவிகளின் நடிப்பு நிரம்பி இருக்கிறது. எப்படி பாபா பழைய சரீரத்தில் வந்திருக் கிறாரோ, அப்படி நீங்களும் பழைய சரீரத்தில் இருக்கிறீர்கள். பாபா இந்த பழைய சரீரத்திலிருந்து உங்களை விடுதலை செய்து புதியதைத் தருகிறார். சோழிக்கு சமமான நிலையிலிருந்து எப்படி வைரத்துக்கு சமமாவது என்பதற்கு வழி கூறுகிறார். அவர்களும் பாடுகின்றார்கள், நாயகன் ஒருவனே என்று, பாபா கூறுகிறார், நான் பரந்தாமில் வசிப்பவன் மிகவும் பழைய சரீரத்தில் நான் வந்திருக்கிறேன். உங்களுக்கும் 84 பிறவிகளில் கடைசியாக இந்த அழுக்கான சரீரம் இருக்கிறது. நீங்களும் உங்களை ஆத்மா என்று புரிந்து கொள்ளவும். உங்களுடைய 84 பிறவியை முழுவதும் அனுபவித்து விட்டீர்கள். இனி நமக்கு புது உலகில் புது சரீரம் கிடைக்கும், அப்படி என்றால் எவ்வளவு குஷியில் இருக்க வேண்டும்? அதில் வரிசைப்படி இருக்கிறீர்கள். சிலர் முழு டல் ஹெட்டாக (மந்த புத்தியாக) இருக்கிறார்கள். மாயா முற்றிலும் கல்புத்தி ஆக்கி விட்டது. சூடான தோசை கல்லில் நீரை தெளித்ததும் முழுவதும் வற்றி விடுவதைப் போல அப்படி சூடான தோசைக் கல்லாக இருக்கிறார் கள். குழந்தாய், தன்னை ஆத்மா என்றும் பாபாவின் குழந்தை என்றும் புரிந்தால் போதும். அதுகூடப் புரிய வில்லை. அப்படிப் புரிந்திருந்தால் ஆச்சரியமாகி ஓடுவது ஏன்? மாயா மிகவும் பல முள்ளது. யாரேனும் தவறு செய்தால், மாயா அடி கொடுக்கும். குழந்தாய், பாபா வந்திருக்கிறார் ஆஸ்தி தருவதற்காக மீண்டும் நீ விகாரி ஆகிறாயே! மாயா பெரிய பலமான அடியைக் கொடுக்கிறது. பாபா அடி கொடுப்பதில்லை. மாயா அடி கொடுத்து முகத்தைத் திருப்பி விடுகிறது. இப்படி நிறைய பேர் மாயாவிடம் அடியை வாங்கிக் கொண்டு இருக்கின்றார்கள். மாயாவும் சொல்கிறது, நீ பாபாவை நினைக்கவில்லை, ஆகையால் நான் அடிக்கிறேன். மாயாவுக்கு அப்படிப்பட்ட கட்டளை கிடைத்திருக்கிறது. புத்தி இல்லாதவரை புத்தசாலி ஆக்க வேண்டும் என்றால், நீங்கள் ஏன் சேவை செய்வதில்லை. இப்பொழுது வரை மாயாவிடம் அடி வாங்க வேண்டுமா என்ன? சிலர் நிறைய அடி வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். சிலர்

கோபம், சிலர் மோகம் என்ற பெயரில் அடி வாங்குகிறார்கள். நீங்கள் எல்லாவற்றையும் சரண்டர் (சமர்ப்பணம்) செய்தபிறகு டிரஸ்டியாக (தர்மகர்த்தாவாக) இருங்கள். விகாரத்தையும் தானமாக கொடுத்து விட்டீர்கள். பிறகு அதை ஏன் வேலையில் பயன்படுத்துகிறீர்கள். விகாரத்திற்கு எந்தவொரு வடிவமும் இல்லை. பணத்தை டிரஸ்டியாகக் கவனித்து வாருங்கள். அதை செயலில் பயன்படுத்தலாம். ஆனால் மிகவும் கவனமாக பாபாவின் ஸ்ரீமத் படி செய்ய வேண்டும். பணத்தின் மூலம் எந்தவொரு பாவக் காரியமும் செய்யக் கூடாது. செய்தால் அதன் சுமை முழுவதும் உன் தலை மீது விழும்.

மாயா மிகவும் தமோபிரதானமாக (தாழ்ந்த நிலையில்) இருக்கிறது. அது அறிந்திருக்கிறது. இவர் பாபாவை சரியான முறையில் நினைவு செய்யவில்லை, ஆகையால் இவருக்கு குத்து விடு என்கிறது. மாயா கூறுகிறது பாபாவையும், ஆஸ்தியையும் நினைவு செய்யவில்லை என்றால் நான் அடிப்பேன், அநேகக் குழந்தைகள் எழுதவும் செய்கிறார்கள், பாபா, என்னை மாயா அடிக்கிறது. பாபாவும் எழுதுகின்றார், குழந்தாய்! மாயாவுக்கு கட்டளை கிடைத்திருக்கிறது. நன்றாக அடி கொடு. ஏனெனில் நீ எனக்கு சொந்தமாகவில்லை, உன்னை சதா சுகமாக வைக்க வந்திருக்கிறேன். அப்படி இருந்தும் குழந்தை நீ நினைவு செய்யவில்லை. நினைவு செய்வது மிகவும் சுலபம். ஆனாலும் தாமதமாகிறது. அப்படி இல்லை என்றால் பாபாவையும், ஆஸ்தியையும் நினைவு செய்து குஷி என்ற பாதரசம் புத்தியில் ஏறச் செய்ய வேண்டும். இறுதியில் நினைவு செய்து, செய்து குஷியில் திழைப்பீர்கள். ஆஹா! நான் பாபாவிடம் சென்று விடுவேன். பிறகு சொர்க்கத்திற்கு வந்து விடுவேன், பிறகு ஒரேடியாக மகிழ்ச்சி நிரம்பி பைத்தியம் (போதையில்) மாதிரி சென்று விடுவீர்கள்.

இந்த விஷயம் அதாவது ஆத்மா பரம்பிதா பரமாத்மாவின் நாயகி என்பதை எவரும் அறிய வில்லை. உண்மையிலும் உண்மையான நாயகி நீங்கள் தான். அரை கல்பமாக நீங்கள் நாயகி ஆகி நாயகனை நன்றாக நினைவு செய்கிறீர்கள். ஆனால் ஆத்மா பரமாத்மா மீது அன்பு செலுத்துகிறது என்பதை நீங்கள் அறியவில்லை. அவர்கள், ஆத்மா தான் பரமாத்மா, பரமாத்மா தான் ஆத்மா என்று சொல்லி விட்டார்கள். இங்கே நிறைய வித்தியாசம் இருக்கிறது. நீங்கள் அறிந்திருக்கிறீர்கள் பரமாத்மா நாயகன். அந்த தூய்மையான பரமாத்மா நம்மை எவ்வளவு அழகுப்படுத்துகிறார்? நாம் ஆத்மா அழுக்கானபடியால் நகையும் (உடலும்) அழுக்காகி விட்டது. பாபா அதை வெண்மையாக்க வந்திருக்கின்றார். பிறகு சரீரம் கூட பொன்யுக சரீரம் கிடைக்கும். அழுக்கு தங்கத்தில் ஒட்டுகிறது இல்லையா!

பாருங்கள்! இந்தக் கோவில் ஆதி தேவருடையது. அவர் பெயரை ஒருவர் மஹாவீர் என்று வைத்து விட்டார்கள். அர்த்தம் கொஞ்சமும் விளங்கவில்லை. ஹனுமானையும் மகாவீர் என்று சொல்லி விட்டார்கள். ஹனுமான் எங்கே ஆதி தேவர் எங்கே அவரையும் மகாவீர் என்று சொல்லி விட்டார்கள். ஜைன முனி மகாராஜா எதை சொன்னாரோ, அது நடைமுறை ஆகியது. தற்காலத்தில் ரித்தி சித்தியும் நிறைய ஏற்பட்டிருக்கிறது. இந்த பாபா எல்லோரையும் அறிந்திருக்கிறார். அவர்கள் கடுமையாக உழைக்கிறார்கள். கையில் குங்குமப் பூவை காட்டு கிறார்கள். மனிதர்கள் ஆஹா! அற்புதம் என்கிறார்கள். உடனே

அவர்களைப் பின்பற்ற ஆரம்பித்து விடு கின்றார்கள். ரித்தி சித்தி செய்பவர்களைப் பின்பற்ற நிறைய பேர் உள்ளனர். இங்கே அந்த மாதிரி விஷயம் இல்லை. பாபா கூறுகிறார்: நான் 5000 ஆண்டுகளுக்கு முன்னால் வந்ததைப் போல வந்திருக்கின்றேன். இப்படி யாரும் சொல்ல முடியாது. குழந்தை கள் கூறுகிறார்கள், பாபா 5000 ஆண்டுகளுக்கு முன்னால் நாங்கள் வந்திருந் தோம். உங்களிட மிருந்து சொர்க்கத்தின் ஆஸ்தியை வாங்கி இருந்தோம். இப்பொழுது பரம்பிதா பரமாத்மா சிவனுக்கு குழந்தையாகி விட்டோம் இந்த பிரம்மா மூலம், உலகம் இருப்பது கலியுகத்தில், கலியுகத்தில் பிராமணர் எங்கிருந்து வந்தார்கள்? பிராமணர்கள் சங்கம யுகத்தில் இருக்க வேண்டும். காலுக்கும் குடுமிக்கும் (சிகரத்திற்கும்) சந்திப்பு ஏற்பட்டது இல்லையா? சூத்திரருக் கும் பிராமணருக்கும் சந்திப்பு இந்த சங்கமயுகம். சூத்திரரிலிருந்து பிறகு பிராமணர் ஆகிறார்கள். இந்த 84 பிறவிச் சக்கரத்தை யாரும் அறியவில்லை. நாம் பிராமணர் நடைமுறையில் பிரம்மா வின் குடும்பமாகி விட்டோம் என்பதை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். அந்த பிராமணருக்கு நீங்கள் கூற முடியும். நீங்கள் தம்மை பிராமணர் என்றும், பிரம்மாவின் குடும்பம் என்றும் கூறு கின்றீர்கள், சரி, நல்லது. பிரம்மாவின் தந்தை யார்? என்பதைக் கேளுங்கள் அவர்களால் கூற முடியாது. அவர் கள் டப்பிக்குள் வைத்த மதிப்பில்லாத ஒரு பொருள். பிறகு சொல்லுங்கள் நாங்கள் தான் பிராமணர், பிறகு பகவானாகிறோம். நீங்கள் எல்லோரும் எங்கள் பக்தர்களாக இருந்தீர்கள்.

இப்பொழுது நீங்கள் கூறுகிறீர்கள்: பாபா, நாங்கள் இலட்சுமியை திருமணம் செய்ய தகுதியாகிக் கொண்டு வருகின்றோம். அதற்கு முயற்சி தேவை. நாம் பரந்தாமிலிருந்து வந்திருக்கிறோம் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். இப்பொழுது, பாபா மீண்டும் திரும்பி அழைத்துச் செல்ல வந்திருக்கிறார். நாமும் பிரம்மாண்டத்திற்கு எஜமானாக இருக்கிறோம். பாபாவும் பழைய உடலில் வந்திருக்கிறார், நாமும் பழைய உடலில் இருக்கிறோம். பாபா கூறுகிறார் நானும் பழைய உடலை ஆதாரமாக எடுக்க வேண்டியிருக்கிறது. இப்பொழுது தந்தையான என்னை நினைவு செய்தால், பாவங்கள் அழிந்து விடும். இதற்கு நேரமும் தருகிறேன். பாண்டவ அரசாங்கத் திற்கு குறைந்த பட்சம் 8 மணி நேரம் சேவை செய்ய வேண்டும். இராஜயோகம் கற்றுக் கொடுக்க வேண்டும். சங்கொலி எழுப்ப வேண்டும். நீங்கள் ஸ்ரீமத் படி குறிப்பாக பாரதத்தையும், பொதுவாக உலகத்தையும் சொர்க்கமாக்குகிறீர்கள். சொர்க்கத்தில் நீங்கள் மட்டும் வருகிறீர்கள். மற்ற தர்மத்தினர் வருவதில்லை. பிராமணர், தேவதா, சத்திரியர், வைஷ்யர் மற்றும் சூத்திரர் இதற்கு விராட ரூபம் என்று சொல்லப்படுகிறது. ஒரு விராட ரூப சித்திரத்தை உருவாக்க வேண்டும். அதனால் மனிதர்கள் சுலபமாகப் புரிந்து கொள்வார்கள். விஷ்ணுவை விராட ரூபத்தில் கொண்டு வந்திருக்கிறார்கள். படம் எப்படியாவது கண்டிப்பாக இருக்க வேண்டும். இல்லையா? பள்ளிக்கூடத்திலும் படங்களை வைத்திருக்கிறார்கள். இல்லை என்றால் குழந்தைகளுக்கு யானை என்றால் என்ன என்பது எப்படி புரியும்? படம் மூலம் காட்டுகிறார்கள். அதுபோல் இதுவும் நான்கு யுகங்கள். இப்பொழுது கலியுகம் நடக்கிறது. கண்டிப்பாக சக்கரம் சுழலும். பிராமணர் சங்கம யுகத்தில் இருக்கிறார்கள். மற்றவர்கள் லௌகீக பிராமணர். அவர்கள் வழிகாட்டிகள். அவர்கள் பிரம்மாவின் வாய்வழி வம்சம் இல்லை. பிரம்மாவின் வாய்வழி வந்தவர்களுக்கு சொத்து (ஆஸ்தி) தாத்தாவிடமிருந்து கிடைக்கிறது.

அந்த பிராமணர்களுக்கு ஆஸ்தி எங்கே கிடைக்கிறது? இந்த விஷயங்களை எல்லாம் உங்களில் கூட வரிசைப்படி தான் புரிந்து கொள்ள முடியும். நல்லது.

இனிமையிலும் இனிமையான செல்லமான குழந்தைகளுக்கு, தாய் தந்தை மற்றும் பாப்தாதாவின் அன்பும் நினைவும் காலை வணக்கமும். ஆன்மீகத் தந்தையின் ஆன்மீகக் குழந்தைகளுக்கு வணக்கம்.

தாரணைக்கான முக்கிய சாரம்:

(1) புத்தியால் எல்லாவற்றையும் சமர்ப்பணம் (சரண்டர்) செய்துவிட்டு டிரஸ்டியாகி (நிமித்தம்) வாழவும்.மிகவும் எச்சரிக்கையுடன் ஸ்ரீமத்படி செயல் புரியவும்.

(2) பாபாவையும் ஆஸ்தியையும் நினைவு செய்து அபாரமான குஷியை அனுபவம் செய்யவும். பாபாவின் நினைவில் தன்னை மறந்திருக்க வேண்டும். உண்மையான நாயகி ஆக வேண்டும்

வரதானம் : உள்ளடக்கும் மற்றும் ஒருமுகப்படுத்தும் சக்தி மூலமாக ஒருமுக நிலையின் அனுபவம் செய்யக் கூடிய சார சொரூபம் ஆவீர்களாக.

தேகம், தேகத்தின் சம்பந்தங்கள் மற்றும் பொருட்களின் விஸ்தாரம் மிகவும் பெரியதாகும். அனைத்து விதமான விஸ்தாரங்களையும் சார ரூபத்தில் எடுத்து வர வேண்டும் என்றால் உள்ளடக்கும் அல்லது ஒருமுகப் படுத்தும் சக்தி தேவை. அனைத்து விதமான விஸ்தாரங் களையும் ஒரு பிந்துவில் (புள்ளி) உள்ளடக்கி விடுங்கள். நானும் பிந்து, தந்தையும் பிந்து. ஒரு தந்தையான பிந்துவில் முழு உலகமே அடங்கி உள்ளது. எனவே பிந்து ரூபம் என்றாலே சாரத்தின் சொரூபம் ஆகி விடுவது. அதாவது ஒருமுக நிலை உடையவர் ஆவது. ஒருமுக நிலையின் பயிற்சி மூலமாக ஒரு நொடியில் எங்கு வேண்டுமோ, எப்பொழுது வேண்டுமோ புத்தி அதே நிலையில் நிலைத்திருக்கக் கூடியதாக ஆகி விடும்.

சுலோகன்: யார் எப்பொழுதும் ஆத்மீகத்தின் நிலையில் நிலைத்திருப்பார்களோ, அவர்களே ஆன்மீக ரோஜா மலர் ஆவார்கள்